**OS.No.406/2019 P.W.1-நிர்மலா 01.06.2026**

**குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் என் மகனின் பொது அதிகாரம் உள்ளவரா என்றால் ஆம். நான் தாய் என்பதால் இந்த வழக்கை பற்றிய முழு விவரம் எனக்கு தெரியும். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் பட்டா கோரி வழக்கை தாக்கல் செய்தேன். தவா சொத்தானது கிராம நத்தம் என்ற வகைப்பாட்டை சேர்ந்ததாகும். தவா சொத்து என் அனுபவத்தை காட்ட செட்டில்மெட் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். தவா சொத்தை பட்டா கேட்டு தாக்கல் செய்தேனா என்றால் தவா சொத்தானது எனது முப்பாட்டனின் அனுபவித்தில் இருந்தது அதன்பின்பு நான் பட்டா கேட்டு மனு கொடுத்தேன். பிரதிவாதிகளை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. பட்டா கேட்டு முறையாக மனு தாக்கல் செய்து இருந்தால் பிரதிவாதிகள் பட்டா கொடுத்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.